செய்தி வெளியீடு எண்: 483 /2017 நாள் :11.08.2017

**<u>வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்திற்குட்பட்ட நெட்டேரி, காத்தாரிகுப்பம், பிச்சனூர் மற்றும் விழுதோணிப்பாளையம் ஆகிய கிராமங்களில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன!</u>**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திற்குட்பட்ட நெட்டேரி, காத்தாரிகுப்பம், பிச்சனூர் மற்றும் விழுதோணிப்பாளையம் ஆகிய கிராமங்களில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் நேரடி நியமன முறையில் இடஒதுக்கீடு அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன. மேற்படி கிராம உதவியாளர் பணிக்கு குடியாத்தம் வட்டத்தில் நிரந்தரமாக குடியிருக்கும் எஸ்.சி., மற்றும் எஸ்.டி., பிரிவுகளிலிருந்து 21 முதல் 35 வயது வரையும், எம்.பி.சி. மற்றும் பி.சி. பிரிவுகளிலிருந்து 21 முதல் 32 வயது வரையிலும், பொது வகுப்பினருக்கு 21 முதல் 30 வயது வரையும் 01.08.2017-ம் நாளில் பூர்த்தியடைந்திருக்க வேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் நெட்டேரி வருவாய் கிராமத்திற்கு ஆதிதிராவிடர் (அருந்ததியர்) முன்னுரிமையற்றவராகவும், காத்தாரிகுப்பம் வருவாய் கிராமத்திற்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமையற்றவராகவும், பிச்சனூர் வருவாய் கிராமத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) முன்னுரிமையற்றவராகவும், விழுதோணிப்பாளையம் வருவாய் கிராமத்திற்கு பொதுப் பிரிவினர் முன்னுரிமை உள்ளவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பதாரர்கள் குறைந்த பட்ச கல்வித் தகுதி 5ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் அதிகபட்சம் 10 ஆம் வகுப்பு தவறியவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து வரும் 23.08.2017 மாலை 5.45 மணிக்குள் குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கும் வகையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சான்றிதழ்களின் நகல்களுடன் கூடிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

11.8.17